IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE
(FAST TRACK COURT), VELLORE, VELLORE DISTRICT.
DEPOSITION OF WITNESS

OS.NO. - 176/2021

D.W.1 - திருமதி.ஜானகி

DATE - 17.02.2026.

பி.வா.சா.1 குறுக்கு விசாரணை-

நானும் எனது இறந்துபோன மகன் சேர்ந்து வாதியிடம் ரூ.10,00,000/- கடன் கேட்டு வாதி தாவா தாக்கல் செய்துள்ளார் என்றால் சரி. 05.10.2020 நானும் இறந்துபோன எனது மகன் கிரியும்சேர்ந்து வாதியிடம் கடனுருதி சீட்டு எழுதி ரூ.10,00,000/- கடன் பெற்றதாக வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரி ஆனால் எவ்வித கடனையும் வாங்கவில்லை கடனுருதி சீட்டையும் எழுதி கொடுக்கவில்லை. இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பாகவே வாதி ஒரு வழக்கிறஞர் அறிவிப்பை எனக்கும் எனது மகனுக்கும் கொடுத்தார் அதற்கு நாங்கள் பதில் அறிவிப்பை அனுப்பினோம். வழக்கறிஞர் அறிவிப்பை நான் பெற்றுக்கொண்டதற்கு அஞ்சல் ஒப்புதல் அட்டையில் கைரேகையை வைத்துள்ளேன். எனக்கு கையெழுத்து போடத் தெரியாது கைரேகை தான் செய்வேன். நான் வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றும் நான் கையெழுத்து செய்வேன் வழக்கிற்காக கைரேகை மட்டும் தான் செய்கிறேன் என சொல்கிறேன் என்றால் சரியல்ல. எனது தகப்பனார் பெயர் லட்சுமி ஐயா. நான் 152 வள்ளலார் நகர் கம்பர் தெரு கொண்ட சமூத்திரத்தில் குடியிருக்கிறேன். நான் 07.04.2025 ல் கணேஷ் குமார் என்பவருக்கு பண்டர் காலனி பிள்ளையார் தெருவில் இருக்கும்

இரண்டு வீடுகளை நான் விற்றேன் என்றால் நான் கிரையம் செய்து கொடுக்கவில்லை. 07.04.2025 பத்திர எண்.3276/2025 விக்கிரைய பத்திரம் கணேஷ் குமாருக்கு வீட்டினை விற்கவில்லை. அந்த வீடு எனது மகன் கிரி பெயரில் இருந்த வீடு என்றால் சரி. 29.04.2016 அன்று எனது மகன் கிரி குமார் என்பவரிடமிருந்து அந்த வீட்டை வாங்கியிருந்தார் என்றால் சரி. அந்த வீட்டின் ஒரு பகுதியை நாகேஷ்வர ராவ் (எ) வெங்கடேசன் தனது மகனான கிரிக்கு தான பத்திரம் எழுதி கொடுத்தார் என்றால் வெங்கடேசன் கிடையாது நாகேஷ்வர ராவ் தான் எழுதி கொடுத்தார். கிரியினுடைய அப்பாவிற்கு நாகேஷ்வர ராவ் (எ) வெங்கடேசன் என இரண்டு பெயர் என்றால் வெங்கடேசன் என்ற பெயர் கிடையாது. நகேஷ்வர ராவ் (எ) வெங்கடேசன் தானமாக கொடுத்த வீட்டின் ஒரு பகுதி எனது மகன் கிரி வாங்கிய வீட்டின் மற்றோரு பகுதி ஆகிய இரண்டையும் சேர்த்து கிரி இறந்தவுடன் நான் கணேஷ்க்கு வீட்டை விற்பனை செய்தேன் என்றால் வீட்டை விற்பனை செய்யவில்லை. கணேஷ் ICICI வங்கியில் எனது கடனை கட்டி விட்டதால் மேற்படி வீட்டை கணேஷ்க்கு நான் விற்பனை செய்தேன். என்னிடம் காண்பிக்கப்படும் விக்கிரைய பத்திரத்தின் நகல் நான் மேற்படி வீட்டை கணேஷ்க்கு விற்பனை செய்த விக்கிரைய பத்திர நகல் என்றால் எனக்கு படிக்கத் தெரியாது. என்னிடம் காண்பிக்கப்படும் கணேஷ்க்கு நான் வீட்டை விக்கிரையம் செய்து கொடுத்த பத்திர நகலில் ஆங்கிலத்தல் ஜானகி என கையெழுத்திட்டுள்ளது என்னுடையது என்றால் சாட்சி கையெழுத்தை பார்த்துவிட்டு நினைவில்லை என கூறுகிறார். நான் ரூ.70,00,000/- கடன் என்று சொன்னார்கள் எவ்வளவு கடனை கணேஷ் எனக்காக வங்கியில் கட்டினார் என்று தெரியாது நான் எவ்வளவுக்கு சொத்தை விற்பனை செய்தேன் என்பதும் எனக்கு தெரியாது. கணேஷ் குமார் என் அக்காவுடைய பேரன். கணேஷ் குமார் என்னுடைய கடனை செலுத்தியதற்கு தான் அந்த

பத்திரத்தை எழுதி கொடுத்ததாக சொல்கிறேன். அந்த பத்திரத்தில் கையெழுத்து வேறு வேறு மாதிரி தெரிகிறது. கணேஷ்க்க விற்பனை செய்த பத்திரத்தில் ஆங்கில்திலுள்ள கையெழுத்து என்னுடையது தான் என்றும் வழக்கிற்காக கைநாட்டு மட்டுமே செய்து கொடுப்பேன் என பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. கம்பர் தெரு, வள்ளலார் நகரில் இருக்கும் வீடு எனது சொந்த வீடு. பேரணாம்பட்டில் ஒரு காலி மனை இருக்கிறது. எனது மகனுக்கு நான் பெரிய சமாதி கட்டியுள்ளேன் என்றால் என்னுடைய தம்பி தான் கட்டியுள்ளார் என்னிடம் காண்பிக்கப்படும் புகைப்படம் என் மகனின் சமாதி புகைப்படம் வா.சா.ஆ.4. எனது மகன் கிரி BE படித்துள்ளார். எனது மகன் முடி வியாபாரம் செய்து வந்தார் என்றால் இல்லை. நான் முடி வியாபாரம் செய்து வந்தேனா என்றால் இல்லை. Sri Venkateswara Human Hair Exporters என்ற பெயரில் Company நடத்தி வந்தேன் என்றால் இல்லை. குடியாத்தம் பாரத் ஸ்டேட் வங்கியில் Sri Venkateswara Human Hair Exporters Company என்ற பெயரில் வங்கி கணக்கை எனது மகன் பராமரித்து வந்தார் என்றும் அதில் நான் நாமினியாக L.ஜானகி ஆக இருந்தேன் என்றால் சரியல்ல. அந்த வங்கி கணக்கில் லட்சக் கணக்கில் பரிவர்தனை நடைபெற்றுள்ளது என்றால் அந்த மாதிரி கம்பனி எதுவும் இல்லை. மேற்படி வங்கியிலிருந்து எனது மகன் இறந்த பிறகு அந்த வங்கி கணக்கில் பணம் முழுவதும் நான் பெற்றேன் என்றால் இல்லை. எனது மகன் கிரி முடி வியாபாரம் மிக பெரிய அளவில் செய்து வந்தார் என்றும் வழக்கிற்காக நான் பொய்யாக இல்லை என சொல்கிறேன் என்றால் சரியல்ல. வாதியை ஏமாற்ற வேண்டும் என்பதற்காக எனது அக்கா மகன் பெயரில் பெயரளவிற்கு சொத்தை வழக்கிற்கு பின்னிட்டு மாற்றியுள்ளேன் என்றால் சரியல்ல. எனது முதல் கணவரின் பெயர் ஆறுமுகம். இரண்டாவது கணவரின் பெயர் தான் நாகேஷ்வர ராவ். எனது இரண்டாவது கணவர்

நாகேஷ்வர ராவுக்கு வெங்கடேசன் என்ற பெயர் இருந்ததால் தான் எனது மகன் Sri Venkateswara Human Hair Exporters என்ற பெயரில் Company நடத்தி வந்தார் என்றால் அந்த பெயரில் கம்பனியே இல்லை. எனக்கு கோடிக்கணக்கான சொத்துக்கள் இன்னமும் இருக்கிறது என்றும் வழக்கிற்காக சொத்துக்கள் இல்லை என பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. எனது மகன் ஊர் பூராக கடன் வாங்கினார் என்றால் ICICI வங்கி கடன் வெளியில் ஒரு வீட்டு அடமான கடன் மட்டும் தான் வேறு எந்த கடனும் இல்லை. நானும் எனது மகனும் சேர்ந்து தான் வாதியிடம் கடன் வாங்கினோம் என்றும் வழக்கிற்காக பொய்யாக வாதியிடம் கடன் வாங்கவில்லை என சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் கையெழுத்து ஒரே மாதிரி போடுவேனா அல்லது வேறு வேறு மாதிரி போடுவேனா என்றால் ஒரே மாதிரி தான் நான் கையெழுத்து போடுவேன். என்னிடம் காண்பிக்கப்படும் நான் தாக்கல் செய்த பதிலுரையில் உள்ள கையெழுத்து என்னுடையது போல தான் உள்ளது. பிரதிவாதியின் வக்காலத்து பிரதிவாதியிடம் காண்பிக்கப்பட்டு கையெழுத்து அவருடையதா என கேட்டபோது சாட்சி அவரது கையெழுத்து வேறு மாதிரி உள்ளது என்று கூறுகிறார். 15.10.2020 ல் நானும் எனது மகனும் கடனுருதி சீட்டில் கையெழுத்து போட்டுவிட்டு தாவா கடனை வாங்கிவிட்டு பொய்யாக கடன் வாங்கவில்லை என கூறுகிறேன் என்றால் சரியல்ல. நான் கணேஷ்க்கு பதிவு செய்து கொடுத்த விக்கிரைய பத்திரத்திலும், வக்காலத்திலும், பதிலுரையிலும் ஆங்கிலத்தில் கையெழுத்து செய்துவிட்டு வழக்கறிஞர் அறிவிப்பு அஞ்சல் அட்டையில் மட்டும் கைரேகை செய்துவிட்டு கையெழுத்து போடும் பழக்கம் இல்லை என பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. எனது பதிலுரை எனது நிரூபண வாக்குமூலத்தில்

பொய்யாக சங்கதிகளை சொல்லியுள்ளேன் என்றும் தாவா படி தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பித்து சரி என்று ஒப்புக் கொண்டு இன்று 17.02.2026 தேதியில் கையெழுத்திட்டார்.

P V SANDILYAN
Digitally signed by P V SANDILYAN
Date: 2026.02.17 18:57:15 +0600

Additional District Judge(FTC),

Vellore.